கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 08ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.1/2020
இன்
அசல் வழக்கு எண்.103/2020
-----

ராஜசேகரன் ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1. சரவணன்
2. ஹரிஹரசுதன்
3. மீனாட்சி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 04.08.2025ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மகாலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவினை பொறுத்து ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

தாவா A ஷெட்யூல் சொத்தை மனுதாரர்/வாதி சர்வ சுதந்திர பாத்தியமாக அனுபவித்து வருவதில் பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ எவ்வித தடையோ, இடையூறுகளோ செய்யக்கூடாது என இடைக்கால தடை உத்தரவு வழங்கியும், இம்மனு நிலுவையில் இருக்க எதிரவர் இல்லா தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்ககோரியும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :–

இந்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) அசல் வழக்கில் தாவா A ஷெட்யூல் சொத்தை மனுதாரர்/வாதி சர்வ சுதந்திர பாத்தியமாக அனுபவித்து வருவதில் பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ எவ்வித தடையோ, இடையூறுகளோ செய்யக்கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா B ஷெட்யூல் சொத்தில் பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ள மேற்கோப்புகளை அகற்றி கொடுக்க வேண்டுமென

செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே காரணத்திற்காக ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் கோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 2வது எதிர்மனுதாரர்/2வது பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, அதை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

3. தீர்வு:–

3.1) இருதரப்பிற்கும் வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. அசல் வழக்கானது கடந்த 2020ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்த வந்த சூழ்நிலையில் இந்த இடைக்கால மனுவானதும் 2020ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது.

3.2) ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்பட வில்லை.

3.3) மேலும், கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர் நிவாரணம் பெற வேண்டும் என்றால்,

(i) மனுதாரரின் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரருக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்று நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும். ஆனால், இம்மனுவில் மேற்படியான நிபந்தனையை நிரூபணம் செய்யும் விதமாக மனுதாரர்/வாதி தரப்பில் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை.

3.4) மேலும், மேற்படி அசல் வழக்கின் பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரமாக உள்ள நிலையில், மேற்படி மனுதாரர்/வாதியின் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இடைக்கால மனுவினை அனுமதிக்காததால் மனுதாரர்/வாதிக்கு பணத்தால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று மனுதாரர்/வாதி தரப்பால் நிரூபணம் செய்யாததாலும், அசல் வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும், இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும் ஒன்றாக இருப்பதாலும், வழக்குச்சொத்தை பொறுத்து மனுதாரர்/வாதிக்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதை முழு

விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காண இயலும் என்பதால், மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி கோரியுள்ள இடைக்கால தடை உறுத்துக் கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 08.08.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.08 17:20:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

<u>**இணைப்பு**</u>:-
<u>**மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:-

**- இல்லை -**

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.08 17:20:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.01/2020
அசல் வழக்கு எண்.103/2020
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 08.08.2025